සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

අවධානයට:

- **1 - 30** වරையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **31 - 50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையை **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் **இரண்டு** புள்ளிகளைக் கொண்டதாகும்.
- உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

சுட்டெண் : .....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்.

வினாத்தாள் I இற்காக	
வினா இல.	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

	கையொப்பம்	குறியிட்டு எண்
1 வது பரீட்சகர்		
2 வது பரீட்சகர்		
மேலதிக பிரதம பரீட்சகர்		
எண்கணிதப் பரீட்சகர்		
பிரதம பரீட்சகர்		

1. பின்வருவனவற்றுள் எது நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டின் பங்கினை **சிறப்பாக** விபரிக்கிறது ?
   (1) இது நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களைக் கணக்குப் புத்தகங்களில் பதிகிறது.
   (2) இது நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை நிதித் தகவல்களாக மாற்றுகிறது.
   (3) இது நிறுவனத்தின் வருடாந்த கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கிறது.
   (4) இது நிறுவனத்தின் முகாமையாளர்களுக்கு திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு செய்வதற்கான தகவல்களை வழங்குகிறது.
   (5) இது நிறுவனத்தின் வெளிவாரி அக்கறையுடையோர் மற்றும் முகாமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குகிறது. (.....)

2. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது கணக்கீட்டுச் சமன்பாட்டில் உரிமையாண்மையினை ஒரு தனித்த கூறாக இனம் காணுமாறு வேண்டி நிற்கிறது ?
   (1) தொழில் முழுமைக்கூறு (2) அட்டுறு (3) தொடர்ந்து இயங்குதல்
   (4) இணைத்தல் (5) கணக்கீட்டு காலம் (.....)

3. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது/ எவை நிறுவனமொன்றின் நிதிக் கூற்றுக்களில் உத்தரவாதத்திற்கு ஏற்பாட்டினை மேற்கொள்வதுடன் தொடர்புடையதாகும் ?
   A - அட்டுறு B - இணைத்தல் C - முன்னெச்சரிக்கை
   (1) B மட்டும். (2) A , B ஆகியன மாத்திரம். (3) A , C ஆகியன மாத்திரம்.
   (4) B , C ஆகியன மாத்திரம். (5) A , B , C ஆகிய எல்லாம். (.....)

4. அமலன் தனது தனிப்பட்ட சேமிப்புப் பணம் ரூ 500 000 இனையும் தனது ரூ. 2 000 000 பெறுமதியான மோட்டார் வாகனத்தினையும் பாவித்து 01.04.2012 இல் வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்துள்ளார். தொடங்கிய முதல் மாதத்தில் வியாபார நிறுவனம் ரூ. 300 000 இற்கு சரக்குகளை கடனிற்கு கொள்வனவு செய்தது. இவற்றுள் ரூ. 50 000 பெறுமதியானவைகளில் குறைபாடுகள் இருந்ததால் திருப்பியனுப்பப்பட்டன. இக்கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்கான மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை யாது ?
   (1) நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு, விலைப்பட்டியல், வரவுத்தாள்.
   (2) நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு, விலைப்பட்டியல், செலவுத்தாள்.
   (3) பற்றுச்சீட்டு, விலைப்பட்டியல், செலவுத்தாள்.
   (4) வாகனப் பதிவுப் புத்தகம், விலைப்பட்டியல், செலவுத்தாள்.
   (5) வாகனப் பதிவுப் புத்தகம், விலைப்பட்டியல், வரவுத்தாள். (.....)

5. வியாபார நிறுவனமொன்று ரூபா 200,000 பெறுமதியான சரக்குகளை 10% வியாபாரக் கழிவுடன் கடனிற்கு கொள்வனவு செய்துள்ளது. இந்தக் கொடுக்கல்வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் தாக்கம் பின்வருவனவற்றுள் எதனால் காட்டப்படும் ?

	சொத்துக்கள்	பொறுப்புக்கள்	உரிமையாண்மை
(1)	ரூ. 180 000 அதிகரிப்பு	ரூ. 180 000 அதிகரிப்பு	-
(2)	ரூ. 200 000 அதிகரிப்பு	ரூ. 200 000 அதிகரிப்பு	-
(3)	ரூ. 180 000 அதிகரிப்பு	ரூ. 200 000 அதிகரிப்பு	ரூ. 20 000 குறைவு
(4)	ரூ. 200 000 அதிகரிப்பு	ரூ. 180 000 அதிகரிப்பு	ரூ. 20 000 அதிகரிப்பு
(5)	ரூ. 200 000 அதிகரிப்பு	ரூ. 220 000 அதிகரிப்பு	ரூ. 20 000 குறைவு

(.....)

[பக். 2 ஐப் பார்க்க

[பக். 2 ஐப் பார்க்க

6. பின்வரும் தகவல்கள் வியாபாரமொன்றின் மார்ச் 2013 மாதத்துடன் தொடர்புடையது.

விற்பனைகள்	பட்டியல் விலை (ரூ.'000)	வியாபாரக்கழிவு
காசு	1 000	10%
கடன்	4 000	5%

வாடிக்கையாளர்கள் விற்பனைத் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் தமது தொகைகளைக் கொடுத்து தீர்ப்பார்களாயின் அவர்களுக்கு 5% காசுக்கழிவு கொடுக்கப்படுகிறது. கடன்பட்டோர் மீதிகளில் 50% ஆனவை இவ்வாறான கழிவுகள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளன என வியாபாரத்தின் பதிவேடுகளிலிருந்து அறிய முடிகிறது.
பின்வருவனவற்றுள் கடன்பட்டோருக்கு கொடுத்த கழிவினைப் பதிவதற்கான சரியான நாட்குறிப்பு எது ?

	வரவு (ரூபா)		செலவு (ரூபா)		
(1)	கொடுத்தகழிவுக்கணக்கு	95 000	காசுக்கணக்கு	95 000	
(2)	கொடுத்தகழிவுக்கணக்கு	95 000	கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு	95 000	
(3)	கொடுத்தகழிவுக்கணக்கு	195 000	காசுக்கணக்கு	195 000	
(4)	கொடுத்தகழிவுக்கணக்கு	295 000	கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு	295 000	
(5)	கொடுத்தகழிவுக்கணக்கு	395 000	காசுக்கணக்கு	395 000	(.....)

7. பின்வரும் கூற்றுக்களில் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பில் எது **சரியானது** ?
(1) கட்டுப்பாட்டுக்கணக்கானது ஒவ்வொரு கடன் கொடுத்தோருக்கும் பராமரிக்கப்படும்.
(2) எல்லாக் கொள்வனவுகளும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும்.
(3) கொள்வனவு நாளேட்டின் மொத்தத் தொகையானது கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும் .
(4) கடன் கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவானது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படுவதில்லை
(5) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கானது கடன் கொடுத்தோர் பேரேட்டில் பராமரிக்கப்படும்.(.....)

● **நிறுவனமொன்றுடன் தொடர்பான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 8 ஆம் 9 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

மார்ச் மற்றும் பெப்ரவரி 2013 மாதங்களில் வைப்பிலிட்ட, வழங்கிய காசோலைகளின் சுருக்கம் பின்வருமாறு.

விபரம்	மார்ச் 2013 (ரூ.'000)	பெப்ரவரி 2013 (ரூ.'000)
வங்கியில் வைப்புச்செய்த காசோலைகள்	1 000	900
வழங்கிய காசோலைகள்	750	600

பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளது:

விபரம்	31.03.2013 இல் உள்ளபடி (ரூ.'000)	28.02.2013 இல் உள்ளபடி (ரூ.'000)
வைப்பிலிடப்பட்ட காசோலைகளில் வசூலிக்கப்பட்டவைகள்	750	900
கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள்	600	500
வங்கியால் நேரடியாக பெற்ற வட்டி வருமானம்	-	50
வங்கிக் கட்டணங்கள்	10	5
வங்கிக்கணக்கு மீதி (வட்டி வருமானம், வங்கிக்கட்டணங்கள் சீராக்க முன்னர்)	395	100
வங்கிக்கூற்றின் படி மீதி	?	245

பெப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

8. 28.02.2013 இலுள்ளவாறான வங்கிக் கணக்கின் சீராக்கிய மீதி எது ?
(1) ரூ. 145 000 (2) ரூ. 190 000 (3) ரூ. 200 000 (4) ரூ. 290 000 (5) ரூ. 345 000 (.....)

9. 31.03.2013 இலுள்ளவாறான வங்கிக் கூற்று மீதி எது ?
(1) ரூ. 245000 (2) ரூ. 285000 (3) ரூ. 295000 (4) ரூ. 385000 (5) ரூ. 395000 (.....)

10. பின்வருவனவற்றுள் எது நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சட்டகத்தின் படி நிதிக் கூற்றுக்களின் **முக்கிய** பண்புசார் குணாதிசயங்களாக கருதப்படுகிறது ?
A - பொருத்தப்பாடு
B - விளங்கிக்கொள்ளக்கூடியதன்மை
C - முன்னெச்சரிக்கை
D - முக்கியத்துவத்தன்மை
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம். (3) A, D ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) A, B, C, D ஆகிய எல்லாம். (.....)

[பக். 3 ஐப் பார்க்க

11. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2013 இல் முடிவடைந்த மாதத்துடன் தொடர்பானதாகும்.

விபரம்	அலகுகள்	அலகு விலை (ரூபா.)
01.03.2013 இலுள்ளவாறான சரக்கிருப்பு	1 000	100
07.03.2013 இல் கொள்வனவுகள்	5 000	120
15.03.2013 இல் கொள்வனவுகள்	3 000	140
20.03.2013 இல் விற்பனைகள்	8 000	-

கம்பனியானது சரக்குகளின் விநியோகத்திற்கான விலையிடலிற்கு "முதல்-வந்தது-முதல்-சென்றது" முறையினைப் பயன்படுத்துகின்றது. வருட இறுதியில் சரக்கிருப்பின் தேறிய தேறக் கூடிய பெறுமதி அலகுகொன்றிற்கு ரூ. 120 ஆக இருந்தது.
கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய 31.03.2013 இல் முடிவடையும் மாதத்திற்கான விற்பனைக் கிரயமும், 31.03.2013 இலுள்ளவாறான சரக்கிருப்பின் பெறுமதியும் பின்வருவனவற்றுள் எது ?

	31.03.2013 இல் முடிவடைந்த மாதத்திற்கான விற்பனைக்கிரயம் (ரூ.)	31.03.2013 இல் உள்ளவாறான சரக்கிருப்பு (ரூ.)
(1)	960 000	120 000
(2)	980 000	140 000
(3)	980 000	120 000
(4)	1 020 000	100 000
(5)	1 020 000	120 000

(.....)

12. கம்பனியொன்று உணவுச்சாலையொன்றைக் கட்டுவதற்காக 01.10.2012 இல் நிலமொன்றை வாங்கியது. இது தொடர்பில் பின்வரும் செலவுகள் ஏற்பட்டுள்ளன.

	ரூபா '000
நிலத்தின் கொள்வனவு விலை	4 000
முத்திரை வரியும் சட்டக் கட்டணங்களும்	200
நிலத்திலிருந்த பழைய கட்டிடத்தை அகற்றுவதற்கான கிரயம்	200
கட்டிடம் கட்டுவதற்காக நிலத்தைத் தயார்படுத்த ஏற்பட்ட கிரயம்	250
நிலத்தின் வருடாந்த பராமரிப்புக் கிரயம்	100

மேலும் பழைய கட்டிடப் பொருட்கள் ரூபா 50 000 இற்கு விற்கப்பட்டுள்ளது.
பின்வருவனவற்றுள் இ. க. நி - 16 (LKAS-16)- 'ஆதனம், பொறி மற்றும் உபகரணம்' இன்படி 31.03.2013 இலுள்ளவாறான நிலத்தின் கிரயம் எது ?

(1) ரூ. 4 400 000 (2) ரூ. 4 450 000 (3) ரூ. 4 550 000
(4) ரூ. 4 600 000 (5) ரூ. 4 700 000

(.....)

13. பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் மார்ச் 2013 மாதத்துடன் தொடர்புடையதாகும்.

	ரூபா '000
குறைவேலையில் அதிகரிப்பு (முதன்மைக்கிரயத்தில் பெறுமதியிடப்பட்டுள்ளது.)	300
முடிவு சரக்கிருப்பில் குறைவு	100
பயன்படுத்திய நேர் மூலப்பொருட்கள்	300
நேர் ஊழியம்	200
தொழிற்சாலை மேந்தலைகள்	200

நிறுவனத்தின் மார்ச் 2013 மாதத்திற்கான முதன்மைக் கிரயமும், விற்பனைக் கிரயமும் பின்வருவனவற்றுள் எது ?

	முதன்மைக்கிரயம் (ரூ.)	விற்பனைக் கிரயம் (ரூ.)
(1)	200 000	300 000
(2)	200 000	500 000
(3)	800 000	900 000
(4)	800 000	1 100 000
(5)	1 000 000	900 000

(.....)

14. கம்பனி ஒன்றில் 31.03.2013 இல் இருந்த முழுச் சரக்குகளும் வெள்ளத்தின் காரணமாக அழிவடைந்துள்ளது. 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளது.

	ரூ.'000
01.04.2012 இல் உள்ளவாறான சரக்கிருப்பு	1 500
கொள்வனவுகள்	3 500
கொள்வனவுத் திரும்பல்கள்	500
விற்பனைகள்	4 800
விற்பனைச் செலவுகள்	600

சரக்குகளை அவற்றின் கிரயத்தின் மீது 20% இலாபம் வைத்து விற்பனை செய்வது கம்பனியின் கொள்கையாகும்.
31.03.2013 இலுள்ளவாறு அழிவடைந்த சரக்குகளின் பெறுமதி யாது ?

(1) ரூ. 500 000 (2) ரூ. 660 000 (3) ரூ. 750 000
(4) ரூ. 1 160 000 (5) ரூ. 1 500 000

(.....)

[பக். 4 ஐப் பார்க்க

[பக். 2 ஐப் பார்க்க

15. பங்காளன் ஒருவரால் பங்குடைமைக்கு கொடுக்கப்பட்ட கடன் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது **சரி ?**

A - உடன்பட்டுக் கொள்ளாதவிடத்து பங்காளன் வருடாந்த வட்டி வீதம் 5% இற்கு உரித்துடையவர்.
B - கடனானது பங்குடமையின் உரிமையாண்மையின் ஒரு பகுதியாகக் கருதப்படும்.
C - கடனிற்கான வட்டியானது பங்காளரின் இலாபநட்ட பகிர்வில் சீராக்கம் செய்யப்படும்.

(1) A மாத்திரம். (2) A, B ஆகியன மாத்திரம். (3) A, C ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) A, B, C ஆகிய எல்லாம். (.....)

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 16 ஆம் 17 ஆம் 18 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

பாலன், கேசவன் ஆகியோர் முறையே ரூ. 3 000 000, ரூ. 4 000 000 மூலதனமிட்டு 01.04.2012 இல் பங்குடைமையொன்றை ஆரம்பித்துள்ளனர். அவர்கள் பின்வரும் நிபந்தனைகளிற்கு உடன்பட்டுள்ளனர்.

- பாலன், கேசவன் ஆகியோர் முறையே ரூ. 450 000, ரூ. 750 000 வருடாந்த சம்பளம் பெற உரித்துடையவர்கள்.
- ஒவ்வொரு பங்காளனும் மூலதனத்தில் 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்கள்.
- பாலன், கேசவன் ஆகியோருக்கிடையில் இலாப நட்டங்கள் சமமாகப் பகிரப்படும்.

31.03.2013 இல் முடிவடைந்த வருடத்தில் பங்குடைமையானது ரூ. 2 400 000 இலாபம் ஈட்டியுள்ளது.
பங்காளர்கள் இவ்வாண்டில் தமது சம்பளம், வட்டி ஆகியவைகளை காசாக எடுக்கவில்லை. ஜமீல் என்பவர் 31.03.2013 இல் பங்காளனாக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மூலதனமாக ரூ. 2 000 000 இனைக் கொண்டு வந்துள்ளார். இத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பு ரூ. 800 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நன்மதிப்பானது புத்தகங்களில் சொத்தொன்றாகப் பதியப்பட்டிருக்கப்படவில்லை. இது பங்காளரின் மூலதனக்கணக்குகளுடாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. பாலன், கேசவன், ஜமீல் ஆகியோர் 01.04.2013 இலிருந்து பங்குடைமையின் இலாபநட்டங்களை முறையே 2:2:1 என்னும் விகிதத்தில் பகிரச் சம்மதித்துள்ளனர்.

16. 31.03.2013 இலுள்ளவாறான பாலன், கேசவன் ஆகியோரின் நடைமுறைக்கணக்கு மீதிகள் எவை ?

	பாலன் (ரூ.)	கேசவன் (ரூ.)
(1)	250 000	250 000
(2)	550 000	650 000
(3)	700 000	1 000 000
(4)	1 000 000	1 400 000
(5)	1 200 000	1 200 000

(.....)

17. 31.03.2013 இலுள்ள பங்குடைமையின் உரிமையாண்மையில் ஏற்பட்ட **அதிகரிப்பு** எவ்வளவு ?
(1) ரூ. 800 000 (2) ரூ. 2 000 000 (3) ரூ. 2 800 000 (4) ரூ. 3 200 000 (5) ரூ. 4 400 000 (.....)

18. பங்காளரின் 01.04.2013 இலுள்ளவாறான மூலதனக்கணக்கு மீதிகள் எவை ?

	பாலன் (ரூ.)	கேசவன் (ரூ.)	ஜமீல் (ரூ.)
(1)	3080 000	4080 000	1840 000
(2)	3320 000	4320 000	2160 000
(3)	3380 000	4480 000	2040 000
(4)	3300 000	4400 000	2000 000
(5)	3400 000	4400 000	2000 000

(.....)

19. உரிமை வழங்கலின்போது கம்பனியின் பங்குதாரர்களால் அவர்களின் முழு உரிமைகளும் பாவிக்கப்படுமாயின் கம்பனியொன்றின் சொத்துக்களின் பெறுமதியிலும் உரிமையாண்மையிலும் இந்த உரிமை வழங்கலினால் ஏற்படும் தாக்கம் எது ?

	சொத்துக்கள்	உரிமையாண்மை
(1)	அதிகரிப்பு	அதிகரிப்பு
(2)	குறைவு	குறைவு
(3)	குறைவு	அதிகரிப்பு
(4)	அதிகரிப்பு	குறைவு
(5)	மாற்றமில்லை	மாற்றமில்லை

(.....)

20. பின்வருவனவற்றுள் எவை கம்பனியொன்றின் உரிமையாண்மையின் கூறுகளாக இனங்காணப்படுகிறது ?

A - நிலத்தின் மீதான மீள்மதிப்பு ஒதுக்கம்
B - செலுத்தவேண்டிய ஊழியர் சேமலாப நிதி
C - பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு
D - நிறுத்தி வைத்த வருவாய்கள்

(1) A, C ஆகியன மத்திரம். (2) A, D ஆகியன மத்திரம். (3) B, D ஆகியன மத்திரம்.
(4) C, D ஆகியன மத்திரம். (5) A, C, D ஆகியன மத்திரம். (.....)

[பக். 5 ஐப் பார்க்க

21. பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றின் 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையதாகும்.

	ரூபா '000
வருடத்திற்கான இலாபம்	850
பெறுமானத் தேய்வு	120
சுட்டிட விற்பனையிலிருந்தான இலாபம்	50
இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு	20
கடன்பட்டோரில் ஏற்பட்ட குறைவு	40

இவ்வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் பின்வருவனவற்றுள் எது ?

(1) ரூ. 760 000 (2) ரூ. 800 000. (3) ரூ. 900 000.
(4) ரூ. 920 000. (5) ரூ. 940 000. (.....)

22. பின்வரும் சூழ்நிலைகளில் எது/எவை கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புகளுக்கான ஏற்பாடுகளில் ஒன்றாக இனங்காண இட்டுச் செல்லும் ?

A - பழுதுடைந்தவைகள் திருத்திக் கொடுக்கப்படும் என்பதற்கிணங்க ஒரு வருட உத்தரவாதத்தில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

B - வருட இறுதியில் வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் மீது ஐயக்கடனிற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

C - சட்ட தேவைப்பாடு இல்லாத போதும், உற்பத்திச் செய்முறையால் ஏற்படும் சூழல் மாசடைதலினை இயலக்கூடியளவிற்கு குறைத்தல் தேவையானதாகும்.

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, C ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) A, B, C ஆகிய எல்லாம். (.....)

23. வரை. நந்தன் பொதுக்கம்பனியின் 31.03.2013 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களிற்கு 31.05.2013 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் வருடாந்தப் பொதுக் கூட்டமானது 15.06.2013 இல் இடம்பெற்றுள்ளது. கம்பனி தொடர்பான பின்வரும் நிகழ்வுகள் 31.03.2013 இற்குப்பின்னர் இடம் பெற்றுள்ளது.

A - 01.04.2013 இலிருந்து 20.04.2013 வரை கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் முதலீடுகளின் சந்தைப் பெறுமதியில் வீழ்ச்சி

B - முக்கிய வாடிக்கையாளர் ஒருவரால் 01.10.2012 இல் கம்பனிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் அவருக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு கம்பனி பணம் செலுத்த வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி 30.04.2013 இல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு.

C - 31.03.2013 இல் முடிவடையும் வருடத்திற்கான இறுதிப்பங்கிலாபமாக பங்கொன்றிற்கு ரூ. 2 இனை 10.06.2013 இல் பிரகடனப்படுத்தல்.

D - 31.03.2013 இலுள்ள சரக்குகள் அதன் கிரயத்தினை விட குறைவான விலையில் 25.05.2013 இல் விற்பனை செய்யப்பட்டமை.

மேலே காணப்படும் எந்த நிகழ்வுகளை 31.03.2013 இலுள்ள நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்தல் வேண்டும் ?

(1) A , C ஆகியன மாத்திரம். (2) A, D ஆகியன மாத்திரம். (3) B, D ஆகியன மாத்திரம்.
(4) B, C, D ஆகியன மாத்திரம். (5) A, B, C, D ஆகிய எல்லாம். (.....)

24. வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்றின் நடைமுறை விகிதம் 3 : 1 ஆகும். கம்பனியின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எது இவ்விகிதத்தில் **குறைவினை** ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் ?

(1) நீண்ட காலக் கடனொன்றைப் பெறல்
(2) இருப்புக்களை கடனிற்கு இலாபத்தில் விற்பனை செய்தல்
(3) காசுக்கு இயந்திரத்தினை வாங்குதல்
(4) கடன்பட்டோரிடமிருந்து காசு பெறல்
(5) கடன்கொடுத்தோருக்கு காசு கொடுப்பனவு (.....)

25. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானதாகும்.

	ரூ.'000
விற்பனைகள்	900
விற்பனைக் கிரயம்	600
01.04.2012 இல் சரக்கிருப்பு	125
31.03.2013 இல் சரக்கிருப்பு	175

வருடத்தில் 360 வேலை நாட்கள் உள்ளன எனக் கருதுக.

31.03.2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் சரக்கு வைத்திருக்கும் காலம்:

(1) 60 நாட்கள் (2) 70 நாட்கள் (3) 75 நாட்கள்
(4) 90 நாட்கள் (5) 105 நாட்கள் (.....)

[பக். 6 ஐப் பார்க்க

[பக். 2 ஐப் பார்க்க

26. பின்வருவன நிறுவனமொன்றினால் பாவிக்கப்படும் மூலப்பொருளொன்றுடன் தொடர்பானது.

	ஆகக்கூடியது	ஆகக்குறைந்தது
பாவனை (அலகுகள்)	600	200
விநியோகக் காலம் (கிழமைகள்)	6	3

இம் மூலப்பொருளின் ஆகக்குறைந்த சரக்கிருப்பு மட்டம் யாது ?

(1) 600 அலகுகள் (2) 1 800 அலகுகள் (3) 3 000 அலகுகள்
(4) 3 600 அலகுகள் (5) 4 400 அலகுகள் (.....)

27. கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளொன்றின் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளது.

முதன்மைக் கிரயம்	ரூ. 600 000
பாதிட்ட மேந்தலைக் கிரயங்கள் – உற்பத்தி தினைக்களம்	ரூ. 350 000
– சேவைத் தினைக்களம்	ரூ. 50 000
உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை	75 000 அலகுகள்
பாதிட்ட இயந்திர மணித்தியாலங்கள்	50 000 (அலகொன்றிற்கான இயந்திர மணித்தியாலம் = 5)

இயந்திர மணித்தியாலமொன்றிற்கான மேந்தலை உறிஞ்சல் வீதமும், அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயமும் பின்வருவனவற்றுள் எது ?

	இயந்திர மணித்தியாலமொன்றிற்கான மேந்தலை உறிஞ்சல் வீதம் (ரூ.)	அலகொன்றிற்கான உற்பத்திக்கிரயம் (ரூ.)
(1)	6	38
(2)	7	43
(3)	7	15
(4)	8	16
(5)	8	48

(.....)

● **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 28 ஆம் 29 ஆம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

கம்பனியொன்று தனிப்பொருள் ஒன்றை 01.04.2013 இல் உற்பத்தி செய்ய தொடங்கியுள்ளதுடன் அலகொன்றினை ரூபா 200 இற்கு விற்பனை செய்கிறது. 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்தில் ஏற்பட்ட கிரயங்கள் பின்வருமாறு இருந்தன.

அலகொன்றிற்கான மாறும் கிரயங்கள்:

நேர் மூலப்பொருள்	ரூ. 40.00
நேர் ஊழியம்	ரூ. 25.00
உற்பத்தி மேந்தலைகள்	ரூ. 20.00
விற்பனை விநியோக மேந்தலைகள்	ரூ. 15.00

வருடாந்த நிலையான கிரயங்கள்:

உற்பத்தி மேந்தலைகள்	ரூ. 200 000
விற்பனை விநியோக மேந்தலைகள்	ரூ. 350 000
உற்பத்தி	20 000 அலகுகள்

28. அலகொன்றிற்கான முதன்மைக் கிரயம் மற்றும் 20 000 அலகுகளில் மொத்த உற்பத்திக்கிரயம் ஆகியன முறையே:

(1) ரூ. 65, ரூ. 1 500 000 (2) ரூ. 65, ரூ. 1 900 000
(3) ரூ. 85, ரூ. 1 900 000 (4) ரூ. 85, ரூ. 2 200 000
(5) ரூ. 100, ரூ. 2 200 000 (.....)

29. அலகொன்றிற்கான பங்களிப்பு மற்றும் 20 000 அலகுகளில் இலாபம் ஆகியன முறையே:

(1) ரூ. 90, ரூ. 1 250 000 (2) ரூ. 100, ரூ. 1 450 000
(3) ரூ. 115, ரூ. 1 750 000 (4) ரூ. 125, ரூ. 1 950 000
(5) ரூ. 135, ரூ. 2 150 000 (.....)

30. ஏனைய காரணிகள் மாறாது இருக்கும்போது விற்பனை விலையில் குறைவும் நிலையான கிரயத்தில் அதிகரிப்பும் ஏற்படும்போது பின்வரும் கூற்றுக்களில் எது **சரியானதாக** இருக்கும் ?

A - சமப்பாட்டுப் புள்ளி பாதிக்கப்படமாட்டாது. B - சமப்பாட்டுப் புள்ளி குறையும்.
C - சமப்பாட்டுப் புள்ளி அதிகரிக்கும். D - இலாபம் குறையும்.
E - பங்களிப்பு குறையும்.

(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, B, E ஆகியன மாத்திரம்.
(3) A, B, C, D ஆகியன மாத்திரம். (4) C, D ஆகியன மாத்திரம்.
(5) C, D, E ஆகியன மாத்திரம். (.....)

[பக். 7 ஐப் பார்க்க

● **31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கான சுருக்க விடைகளைப் புள்ளிக் கோடுகளில் எழுதுக.**

31. பின்வரும் கூற்றுக்களில் எது **"சரி"** , எது **"பிழை"** என்பதைப் பொருத்தமான நிரலில் அடையாளமிடுவதன் மூலம் காட்டுக.

கூற்று	சரி	பிழை
A - முகாமைக் கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக உள்வாரியான அக்கறையுடையோரால் நிறுவனம் பற்றிய தீர்மானம் எடுப்பதற்குத் தகவல்களை வழங்குவதாகும்.	.....	.....
B - பணரீதியாக அளவிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்கள் மட்டுமே நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் பதியப்படும்.	.....	.....
C - நிறுவனத்தின் தகவல்களைப் பயன்படுத்தும் வெளிவாரியான பாவனையாளர்களினால் தீர்மானம் எடுப்பதற்கு "குறித்த நோக்கம் கொண்ட நிதிக் கூற்றுக்கள்" வழங்கப்படுகிறது.	.....	.....
D - பொருளாதார தீர்மானங்களை சமூகம் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்காக கணக்கீடானது தோன்றியதாகும்.	.....	.....

32. நிறுவனமொன்றின் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளினால் அந்நிறுவனத்தின் கணக்காண்டின் இறுதியில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை ஆகியவைகளின் மீதிகள் **அதிகரிக்குமா, குறையுமா, மாற்றமடையாதா** என்பதைக் குறிப்பிடுக.

கொடுக்கல்வாங்கல்கள்	சொத்துக்கள்	பொறுப்புக்கள்	உரிமையாண்மை
A - உரிமையாளர்களின் மூலம் மூலதனத்தை அதிகரித்தல்	.....	.....	.....
B - ஐயக்கடனிற்கான ஏற்பாடு	.....	.....	.....
C - வட்டியுடன் கூடிய கடன் தவணைப் பணக் கொடுப்பனவு	.....	.....	.....
D - வருடமுடிவில் சாதாரண பங்குதாரர்களிற்கான பங்கிலாப பிரகடனம்	.....	.....	.....

33. பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களையும் பதிவதற்கு தேவையான மூல ஆவணங்களையும் அவைகளைப் பதிவதற்குப் பொருத்தமான முதன்மைப் பதிவேடுகளையும் குறிப்பிடுக.

கொடுக்கல்வாங்கல்	மூல ஆவணம்	முதன்மைப் பதிவேடு
A - கடனிற்கு சரக்கு விற்பனை	.....	.....
B - கடன்பட்டோர் சரக்குகளை திருப்பியனுப்புதல்	.....	.....
C - கடன்பட்டோரிடமிருந்து காசு பெறல்	.....	.....
D - அறவிட முடியாக் கடனைப் பதிவழித்தல்	.....	.....

34. வியாபாரமொன்றின் சில்லறைக் காசாளரிடம் மாதத் தொடக்கத்தில் ரூ. 10 000 சில்லறைக்காசு முற்பணமாகக் கொடுக்கப்படுகிறது. மாத இறுதியில் இவர் ரூ. 8 000 இனை மீள் நிரப்புத் தொகையாகக் கேட்டுள்ளார்.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) மாதத்துக்கான சில்லறைக்காசு செலவுகள் : (ரூ.).....

(ஆ) மீள் நிரப்பலுக்கான நாட்குறிப்பு பதிவு (விளம்பல் தேவையில்லை) :

.....

.....

[பக். 8 ஐப் பார்க்க

35. நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் 01.03.2013 இலுள்ளவாறான வரவு மீதி ரூ. 50 000 ஆகும். மார்ச் 2013 மாதத்திற்கான விற்பனை நாளேட்டின் மொத்தம் ரூ. 520 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 250 000 ஆகப் பதியப்பட்டுள்ளது. எனினும், விற்பனைக் கணக்கில் சரியான தொகை பதியப்பட்டுள்ளது. இம்மாதத்தில் கடன்பட்டோர் ரூ. 200 000 செலுத்தியுள்ளனர். மாத முடிவிலுள்ள கடன்பட்டோரின் மீதியில் 10% இனை ஐயக்கடனிற்கான ஏற்பாடாகச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிழைகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக. *(விளம்பல் தேவையில்லை)*

.....

.....

.....

.....

36. சொத்துக்களுக்கான கணக்கீட்டின்போது நிறுவனமொன்று வரலாற்றுக் கிரய எண்ணக்கருவிலிருந்து விலகிச் செல்லக்கூடிய **இரண்டு** சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.

.....

.....

37. ஆடைத் தொழிற்சாலையொன்று தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் **மிகவும் பொருத்தமான** கணக்கீட்டு எண்ணக்கருவினை இனங்காண்க.

A - துணிகளின் இருப்புக்களை நடைமுறைச் சொத்துக்களாகவும், தையல் இயந்திரங்களை நடைமுறையல்லாச் சொத்துக்களாகவும் வகைப்படுத்தல்.

B - குறிப்பிட்ட வருடத்தில் செலுத்திய தொழிற்சாலை வாடகையின் ஒரு பகுதியை முற்கொடுப்பனவாக இனங்காணுதல்.

C - வருட இறுதியிலுள்ள துணிகளின் இருப்புக்களை கிரயத்தினதும் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியினதும் குறைவான தொகையில் பெறுமதியிடல்.

D - ஆடைகளை விற்பனை செய்யும்போது விற்பனை வருமானத்தை இனங்காணுதல்.

உருப்படி **கணக்கீட்டு எண்ணக்கரு**

A - .....

B - .....

C - .....

D - .....

38. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சட்டகத்தில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்திற்கமைய பொறுப்பொன்றிற்கான **மூன்று** பிரதான பண்புகளையும் குறிப்பிடுக.

.....

.....

.....

39. **ஜெயமணி** விளையாட்டுக் கழகத்தில் 31.03.2013 இல் 50 அங்கத்தவர்கள் உள்ளனர். அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தாப்பணம் ரூ. 1 000 ஆகும். 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்தில் சந்தாப்பணமாக ரூ. 45 000 காசாகப் பெறப்பட்டது. முற்பணமாகப்பெற்ற சந்தா 31.03.2013, 31.03.2012 இலுள்ளவாறு முறையே ரூ. 5 000, ரூ. 3 000 ஆகும். பின்வருவனவற்றைக் கணிக்குக

(அ) 31.03.2013 இல்முடிவடைந்த வருடத்திற்கான சந்தா வருமானம் (ரூ.) .....

(ஆ) 31.03.2013 இலுள்ள சந்தா நிலுவை (ரூ.) .....

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 40 ஆம் 41 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

விதுசன், தர்ஷன் பங்குடைமையின் நடைமுறைக் கணக்கு மீதி பின்வருமாறு இருந்தது.

	31.03.2013 இலுள்ளவாறு (ரூபா'000)	**31.03.2012 இலுள்ளவாறு (ரூபா'000)**
விதுஷன்	960	500
தர்ஷன்	940	600

பங்குடைமை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு:

- விதுஷன், தர்ஷன் ஆகியோர் வருடாந்த சம்பளங்களாக முறையே ரூ. 240 000, ரூ. 360 000 ஆகியவற்றுக்கு உரித்துடையவர்கள்.
- இலாப நட்டங்களானது விதுஷன், தர்ஷன் என்போருக்கிடையில் முறையே 3:2 விகிதத்தில் பகிரப்படுகிறது.

31.03.2013 இல் முடிவடைந்த வருடத்தில் விதுஷன், தர்ஷன் ஆகியோருக்கு ரூ. 200 000, ரூ. 300 000 சம்பளமாக செலுத்தப்பட்டது.

[பக். 9 ஐப் பார்க்க

47. பின்வரும் கிரய உருப்படிகளில் எவைகளை தளபாட உற்பத்தியில் ஈடுபடும் கம்பனியொன்றின் முதன்மைக் கிரயங்களின் கூறுகளாக வகைப்படுத்தலாம் ?

கிரய உருப்படி	முதன்மைக் கிரயக் கூறுகள் (ஆம் / இல்லை)
A - மரவேலை செய்வோருக்கான கூலிகள்	.....
B - தொழிற்சாலைக்கான மின்சாரக் கட்டணம்	.....
C - பாவித்த மரங்களிற்கான கிரயம்	.....
D - பொறிக்கான பெறுமானத்தேய்வு	.....

● **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 48 ஆம் 49 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

கம்பனியொன்று ஒரேவகையான கைத்தொலைபேசிகளை உற்பத்தி செய்து அலகொன்றினை ரூ. 25 000 இற்கு விற்பனை செய்கிறது. கம்பனியின் அடுத்த ஆண்டிற்கான பாதிடப்பட்ட விற்பனைகள் 400 அலகுகளாகும். இது கம்பனியின் இயலளவின் 80% இனைப் பிரதிநித்துவப்படுத்துகிறது. இம்மட்ட செயற்பாட்டிற்கான பாதிட்ட கிரயங்கள் பின்வருமாறு:

நேர்மூலப்பொருட்கள் ரூ. 4 000 000
நேர் ஊழியம் ரூ. 2 000 000 (உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் அடிப்படையில் செலுத்தப்படும்.)
மொத்த மேந்தலைகள்: நிலையானவை-ரூ. 750 000, மாறுபவை ரூ. 1 000 000

48. பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) சமப்பாட்டுப் புள்ளி (அலகுகளில்) : .....

(ஆ) பாதுகாப்பு எல்லை (ரூபாவில்) : .....

49. கம்பனியொன்றின் விற்பனை விலையில் ஏற்படும் 10% குறைவானது அதன் அலகு விற்பனைகளை கம்பனியின் இயலளவின் 90% இற்கு அதிகரிக்குமாயின் கம்பனியின் இலாபத்தில் ஏற்படும் **அதிகரிப்பு** அல்லது **குறைவு** யாது ?

.....

.....

50. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் முதலீட்டு செயற்திட்டமொன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியினை பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலைகளும் **அதிகரிக்குமா ? குறைக்குமா ? மாற்றத்தை ஏற்படுத்தாதா ?** என்பதைக் குறிப்பிடுக.

சூழ்நிலை	தேறிய நிகழ்காலப் பெறுமதியின் மீதான தாக்கம்
(அ) ஆரம்ப முதலீட்டில் அதிகரிப்பு	: .....
(ஆ) வருடாந்த பெறுமானத் தேய்வில் அதிகரிப்பு	: .....
(இ) எதிர்பார்க்கப்படும் வருடாந்த காசு வெளிப்பாய்ச்சலில் குறைவு	: .....
(ஈ) கழிவீட்டு வீதத்தில் குறைவு	: .....

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ගිණුම්කරණය	II
கணக்கீடு	II
Accounting	II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අවධානය :

* මුලාම, **இரண்டாம்** වාරයේ ප්‍රශ්න **ඇතක්** පමණක් තෝරා පිළිතුරු සපයන්න.
* ඔබ තෝරා ගන්නා ප්‍රශ්න **අංක** පිළිතුරු පත්‍රයේ ඉදිරියෙන් ලියන්න.
* ඔබ තෝරා ගන්නා ප්‍රශ්න සඳහා පිළිතුරු ලියන්නේ **එක් එක්** ප්‍රශ්නය සඳහා **වෙන වෙන** ම පිළිතුරු පත්‍රයන් භාවිත කරමිනි.

அறிவுறுத்தல்கள் :

* முதலாம், **இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு விடையும் **புதியதொரு தாளில்** ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
* ஒவ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

1. வரையறுத்த நிரோஷன் மனோஜ் பொதுக் கம்பனியின் 31.03.2013 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

	வரவு (ரூ. '000)	செலவு (ரூ. '000)
31.03.2013 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (முன் கொண்டுசெல் தொகையில்)	5400	
01.04.2012 இல் சரக்கிருப்பு	400	
வியாபாரக் கடன்பட்டோர்	400	
காசும் காசுக்குச் சமமானவைகளும்	250	
கொள்வனவுகள்	1500	
ஊழியர் சம்பளங்கள்	400	
அலுவலக வாடகை	360	
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான நடைமுறை ஆண்டுப் பெறுமானத்தேய்வு	700	
தொலைபேசிக் கட்டணங்கள்	40	
இடைக்காலப் பங்கிலாபம்	180	
விற்பனைத் தரகு	50	
குத்தகைத் தவணைக் கட்டணம்	930	
வரி (நடைமுறை ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்கும் செலுத்தப்பட்டது)	50	
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்		2000
01.04.2012 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள்		1380
குத்தகைக் கடன்கொடுத்தோர்		2400
வியாபாரக் கடன்கொடுத்தோர்		350
விற்பனைகள்		4500
01.04.2012 இல் ஐயக்கடனிற்கான ஏற்பாடு		30
	10 660	**10 660**

மேலதிக தகவல்கள்:

(அ) 31.03.2013 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கம் வருமாறு:

சொத்து	கிரயம் (ரூபா'000)	திரண்ட பெறுமானத்தேய்வு (ரூபா'000)	முன்கொண்டு செல்தொகை (ரூபா'000)
கட்டடங்கள்	2000	1200	800
மோட்டார் வாகனம் (01.04.2012 இல் நிதிக் குத்தகையின் கீழ் வாங்கப்பட்டது)	2400	-	2400
தளபாடம், பொருத்துக்கள்	1000	400	600
அலுவலக உபகரணம் (01.04.2012 இல் வாங்கப்பட்டது)	2000	400	1600
	7400	**2000**	**5400**

(ஆ) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதான பெறுமானத்தேய்வு பின்வரும் உருப்படிகளை உள்ளடக்கியுள்ளது. சகல சொத்துக்களும் நிர்வாக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

சொத்து	பெறுமானத்தேய்வு (ரூ.'000)
கட்டடம்	200
தளபாடம், பொருத்துக்கள்	100
அலுவலக உபகரணம்	400
	700

நிதிக் குத்தகையின் கீழ் வாங்கப்பட்ட மோட்டார் வாகனத்திற்கு இன்னமும் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை.

[பக். 2 ஐப் பார்க்க

(இ) 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முன்னர் பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) 31.03.2013 இல் கட்டடம் ரூபா 1000000 காசுக்கு விற்பனை செய்யப்பட்டது. இத்தொகையானது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. கட்டடத்தின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ஆகியன கணக்குகளில் இருந்து இன்னமும் அகற்றப்படவில்லை.

(ii) மோட்டார் வாகனத்தின் குத்தகைக் காலம் 4 வருடங்கள் என்பதுடன் அதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும். மோட்டார் வாகனத்தின் உடைமையானது குத்தகைக் காலத்தின் முடிவில் கம்பனிக்கு மாற்றப்படும். வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் ரூபா 930 000 ஆகும். இவ்வாண்டின் போது செலுத்தப்பட்ட தவணைக் கட்டணமானது, குத்தகைத் தவணைக் கட்டணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டு காலப்பகுதிக்கான குத்தகை வட்டி பின்வருமாறு

ஆண்டு	வட்டி (ரூபா'000)
2012/13	480
2013/14	390
2014/15	290
2015/16	160

(iii) 31.03.2013 இல் சரக்கிருப்புக்களின் கிரயம் ரூபா 800000 ஆகும். இத்திகதியில் சரக்கிருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 780000 ஆகும்.

(iv) வருட இறுதியில் காணப்படும் வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் மீது ஐயக்கடனுக்காக 10% ஏற்பாடு செய்வது கம்பனியின் கொள்கை ஆகும்.

(v) கம்பனியானது இரண்டு வருடங்களுக்கான வாடகை முழுவதையும் 01.04.2012 இல் ஒரே தடவையில் செலுத்தி கட்டடமொன்றை அலுவலகப் பாவனைக்காக வாடகைக்குப் பெற்றுள்ளது. செலுத்தப்பட்ட தொகை முழுவதும் அலுவலக வாடகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(vi) 2013 மார்ச் மாதத்திற்கான தொலைபேசிக் கட்டணங்கள் ரூபா 10000 செலுத்தப்படல் வேண்டும்.

(vii) கம்பனியானது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கின்றது. நியாயமான மதிப்பிடலின் பிரகாரம் கம்பனியானது விற்பனைப் பெறுமதியின் 2% ஐ உத்தரவாதத்திற்கான ஏற்பாடாக செய்தல் வேண்டும்.

(viii) நிறுத்தி வைத்த வருவாய்களை மூலதனமாக்குவதன் மூலம் தற்போதைய பங்குதாரர்களுக்கு பங்கொன்று ரூபா 50 வீதம் 20000 சாதாரண பங்குகளை கம்பனி வழங்கியுள்ளது.

(ix) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரியானது, வரிக்கு முந்திய இலாபத்தின் $\frac{1}{4}$ ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

வரையறுத்த நிரோஷன் மனோஜ் பொதுக் கம்பனியின் பிரசுரித்தல் நோக்கத்திற்கான பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

(2) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றற் கூற்று

(3) 31.03.2013 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று (ஐந்தொகை)

(20 புள்ளிகள்)

2. (அ) **மகேந்திரன், நரேந்திரன், ராஜிதன்** ஆகியோர் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிரும் வியாபார நிறுவனமொன்றின் பங்காளர்கள் ஆவர். 31.03.2012 இல் உள்ளபடியான பங்குடைமையின் நிதி நிலைமைக் கூற்று (ஐந்தொகை) பின்வருமாறு.

	ரூபா'000	ரூபா'000
நடைமுறையல்லாச் சொத்துக்கள்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்-கிரயத்தில்	1000	
திரண்ட பெறுமானத்தேய்வு	(200)	800
நடைமுறைச் சொத்துக்கள்		
சரக்கிருப்பு	200	
வியாபாரக் கடன்பட்டோர்	450	
காசு	60	710
		1510
மூலதனக் கணக்குகள்		
மகேந்திரன்	200	
நரேந்திரன்	400	
ராஜிதன்	200	800
நடைமுறைக் கணக்குகள்		
மகேந்திரன்	150	
நரேந்திரன்	100	
ராஜிதன்	60	310
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		
நரேந்திரன் - கடன் 5%		200
நடைமுறைப் பொறுப்புக்கள்		
வியாபாரக் கடன்கொடுத்தோர்		200
		1510

[பக். 3 ஐப் பார்க்க

மேலதிக தகவல்கள் :

(i) 01.04.2012 இல் ராஜிதன் பங்குடைமையில் இருந்து இளைப்பாறினார். ராஜிதனுக்குச் செலுத்த வேண்டிய தொகையைக் கடனாகக் கருதுவதற்கும் அதற்கு 5% வருடாந்த வட்டி செலுத்துவதற்கும் உடன்பட்டுக் கொள்ளப்பட்டது. இத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ. 1200000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான சகல சீராக்கங்களும் பங்காளர் மூலதனக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) மகேந்திரனும், நரேந்திரனும் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமையைத் தொடர உடன்பட்டனர்.
(அ) ஒவ்வொரு பங்காளரும் ரூ. 120000 வருடாந்த சம்பளத்திற்கு உரித்துடையவர்கள்.
(ஆ) இலாப நட்டங்கள் சமமாகப் பகிரப்படல் வேண்டும்.

(iii) இவ்வாண்டில் மகேந்திரனும், நரேந்திரனும் காசாக முறையே ரூபா 200000, ரூபா 150000 பற்றியிருந்தனர்.

(iv) பங்குடைமையின் சகல விற்பனைகளும், கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாண்டில் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 1800000 பெறப்பட்டுள்ளதுடன், கடன்கொடுத்தோருக்கு ரூபா 900000 செலுத்தப்பட்டுள்ளது.

(v) இவ்வாண்டில் செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 350000 ஆகும்.

(vi) கடன்கள் மீதான வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்.

(vii) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு கிரயத்தின் மீது நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 20% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.

(viii) 31.03.2013 இல் உள்ளபடியான பங்குடைமையின் நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் பின்வருமாறு:

	(ரூபா'000)
சரக்கிருப்பு	275
வியாபாரக் கடன்பட்டோர்	500
காசு	260
வியாபாரக் கடன்கொடுத்தோர்	300

வேண்டப்படுவது:

மகேந்திரன், நரேந்திரன் பங்குடைமையின் பின்வரும் நிதிக் கூற்றுக்கள்.:

(1) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று (பங்காளருக்கான பகிர்வுகள் உட்பட.)
(2) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளரின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்குகள்
(3) 31.03.2013 இல் உள்ளவாறான ராஜிதனின் கடன் கணக்கு

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவது உற்பத்திக் கம்பனியொன்றின் பூரணப்படுத்தப்படாத பாதீடு செய்யப்பட்ட மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை ஆகும்.

மேந்தலைகள்	பகிர்தலுக்கான அடிப்படை	இயந்திரப் பகுதி (ரூ.'000)	முடிவுறுத்தும் பகுதி (ரூ.'000)	பராமரிப்பு பகுதி (ரூ.'000)	மொத்தம் (ரூ.'000)
ஒதுக்கப்பட்ட மேந்தலைகள்		820	480	190	1490
மின்சாரம்					240
வாடகை					180
இயந்திரப் பெறுமானத்தேய்வு					150
ஊழியர் நலன்புரி செலவுகள்					300

மேலதிக தகவல்கள் :

(i)

விபரம்	இயந்திரப் பகுதி	முடிவுறுத்தும் பகுதி	பராமரிப்புப் பகுதி	மொத்தம்
கிலோவாற் மணித்தியாலங்கள்	15000	6000	3000	24000
இயந்திரத்தின் கிரயம் (ரூ.)	1000000	500000	-	1500000
தளப்பரப்பு (சதுர மீற்றர்கள்)	200	100	60	360
ஊழியர் எண்ணிக்கை	25	100	25	150

(ii) பராமரிப்புப் பகுதியானது தனது 60% சேவைகளை இயந்திரப் பகுதிக்கும் மிகுதியை முடிவுறுத்தும் பகுதிக்கும் வழங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(iii) இயந்திரப் பகுதி, முடிவுறுத்தும் பகுதி என்பவற்றின் மேந்தலைகள் முறையே இயந்திர மணித்தியாலங்கள், நேர் ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றது.

(iv) பின்வருவன கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு வகையான உற்பத்திப்பொருட்கள் தொடர்பானதாகும்.

விபரம்	வகை A	வகை B
அலகொன்றிற்கான முதன்மைக் கிரயம் (ரூ.)	700	720
அலகொன்றிற்கு தேவைப்படும் மணித்தியாலங்கள் (பாதிடப்பட்டது)		
- இயந்திர மணித்தியாலங்கள்	5	6
- நேர் ஊழிய மணித்தியாலங்கள்	4	8
உற்பத்தி அலகுகள் (பாதிடப்பட்டது)	1000	1500

வேண்டப்படுவது:

(1) பூரணப்படுத்தப்பட்ட மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (பராமரிப்புப் பகுதியின் மேந்தலைக் கிரயத்தின் மீள்பகிர்வு உட்பட)
(2) ஒவ்வொரு உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்
(3) A, B உற்பத்திப்பொருட்களின் அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம்

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

3. சுஜீவன் என்பவர் 01.01.2013 இல் வியாபார நிறுவனமொன்றை ஆரம்பித்தார். 2013 ஜனவரி மாதத்திற்கான நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு.

இல.	திகதி	கொடுக்கல்வாங்கல்
(i)	01.01.2013	சுஜீவன் தனது வியாபாரத்தில் ரூபா 400000 காசையும் ரூபா 840000 பெறுமதியான வாகனம் ஒன்றையும் முதலீடு செய்தார்.
(ii)	01.01.2013	ரூபா 240000 பெறுமதியான தளபாடம், பொருத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
(iii)	08.01.2013	ரூபா 100000 பெறுமதியான சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதன் முழுத் தொகைக்கும் காசோலை வழங்கப்பட்டது.
(iv)	12.01.2013	ரூபா 80000 கிரயமான சரக்குகள் ரூபா 130000 இற்கு விற்பனை செய்யப்பட்டதுடன் இத்தொகைக்காக காசோலையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
(v)	15.01.2013	ரூபா 150000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
(vi)	20.01.2013	ரூபா 140000 கிரயமான சரக்குகள் ரூபா 200000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
(vii)	23.01.2013	கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய தொகையின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்காக ரூபா 90000 காசோலை வழங்கப்பட்டதுடன் ரூபா 5000 கழிவாகப் பெறப்பட்டது.
(viii)	25.01.2013	செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 90000.
(ix)	26.01.2013	கடன்பட்டோரிடமிருந்து ரூபா 150000 பெறப்பட்டு அது வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

மேலதிக தகவல்கள்:

(i) நிறுவனத்தின் சகல காசுக் கொடுக்கல்வாங்கல்களும் வங்கிக் கணக்கொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

(ii) பின்வரும் காரணங்களினால் 31.01.2013 இல் உள்ளபடியான நிறுவனத்தின் வங்கிக் கூற்று மீதியானது அத்தினத்திலுள்ள காசுப் புத்தக மீதியுடன் இணங்கவில்லை.

(அ) கடன்பட்டோர் ஒருவரால் நேரடியாகவே வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 30000 காசோலையொன்று காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை.

(ஆ) வங்கிக் கட்டணங்கள் ரூபா 2000 காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை.

(இ) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலைகளுள் ரூபா 20000 காசோலையொன்று இன்னமும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) ஆதனம், பொறி உபகரணங்களுக்கு கிரயத்தின் மீது நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.

(iv) மாத இறுதியிலுள்ள கடன்பட்டோர் மீதியின் மீது 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

வேண்டப்படுவது:

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (ix) வரையிலான மேலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தைக் (பெறுமதிகளுடன்) காட்டுவதுடன் ஒவ்வொரு பெறுமதிகளும் அதிகரிக்கின்றதா (+) குறைவடைகின்றதா (–) என்பதனையும் அப்பெறுமதியின் முன்னால் குறிப்பிடுக (பின்வரும் வடிவத்தை பயன்படுத்தவும்)

கொடுக்கல் வாங்கல் இலக்கம்	சொத்துக்கள்					பொறுப்புக்கள்	உரிமையாண்மை
	மோட்டார் வாகனம்	தளபாடம் பொருத்துக்கள்	சரக்கிருப்பு	கடன்பட்டோர்	வங்கி		

(2) மேலுள்ள வங்கி நிரலிலுள்ள மீதியைப் பயன்படுத்தி 31.01.2013 இல் உள்ளபடியான வங்கிக் கூற்று மீதியையும் சீராக்கிய காசுப் புத்தக மீதியையும் கணிப்பிடுக.

(3) 31.01.2013 இல் முடிவடைந்த மாதத்திற்கான சுஜீவன் நிறுவனத்தின் வருமானக் கூற்று.

(15 புள்ளிகள்)

4.(அ) றொசான் தனது ஆடம்பர மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்தி திருமணங்களுக்கு மோட்டார் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தும் வியாபாரமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிடுகின்றார். பின்வருவன மோட்டார் வாகனம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் ஆகும்.

வருடமொன்றுக்கான காப்புறுதிக் கட்டணம்	- ரூபா 58000
வருடமொன்றுக்கான புதுப்பித்தல் அனுமதிக் கட்டணம்	- ரூபா 8000
மாதமொன்றிற்கான திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள்	- ரூபா 5000
வருடாந்தப் பெறுமானத்தேய்வு	- ரூபா 500000
சாரதி சம்பளம்	- மாதாந்தம் ரூபா 9000 அத்துடன் வாடகை வருமானத்தின் 10%
எரிபொருள் கிரயம்	- கிலோ மீற்றர் ஒன்றிற்கு ரூபா 20
பின்வரும் மதிப்பீடுகளும் செய்யப்பட்டுள்ளது:	
வருடாந்த நிர்வாகச் செலவுகள்	- ரூபா 50 000
மோட்டார் வாகன வாடகை வருமானம்	- கிலோ மீற்றர் ஒன்றிற்கு ரூபா 100

வேண்டப்படுவது:

(1) வருடாந்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு மோட்டார் வாகனம் ஓட வேண்டிய கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை

(2) வருடாந்த இலாபமாக ரூபா 350 000 எதிர்பார்க்கப்படுமாயின் மோட்டார் வாகனம் ஓட வேண்டிய கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை

(05 புள்ளிகள்)

[பக். 5ஐப் பார்க்க

(ஆ) உதயதாரகை விளையாட்டுக் கழகமானது தனது அங்கத்தவர்களுக்காக உள்ளக விளையாட்டு அரங்கையும் நீச்சல் தடாகத்தையும் பேணி வருகின்றது. 31.03.2013, 31.03.2012 இல் உள்ளபடியான அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

	31.03.2013 இல் உள்ளபடி (ரூ. '000)	31.03.2012 இல் உள்ளபடி (ரூ. '000)
கட்டடம் (முன்கொண்டு செல்தொகையில்)	2000	2400
நீச்சல் தடாகம் (முன்கொண்டு செல்தொகையில்)	3750	4000
முற்பணமாகப் பெற்ற நீச்சல் தடாக வாடகை வருமானம்	50	60
வருமதி சந்தா	90	80
நிலையான வைப்பு	1200	-
காசு	?	100

பின்வரும் தகவல்கள் 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையனவாகும்.

(i) பின்வரும் சகல செலவுகளும் காசாகச் செலுத்தப்பட்டவையாகும்.

	ரூ. '000
நீச்சல் தடாகக் காப்பாளருக்கான வருடாந்த சம்பளம்	300
ஏனைய ஊழியர்களுக்கான வருடாந்த சம்பளங்கள்	1 200
ஏனைய செலவுகள்	300

(ii) நீச்சல் தடாகமானது வெளியிலுள்ள நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடப்படுகின்றது. இவ்வாண்டில் வாடகைக்கு விடப்பட்ட நாட்களின் எண்ணிக்கைகளும் அறவிடப்பட்ட கட்டணங்களும் பின்வருவனவாகும்.

கட்டணம் (ரூ.)	வாடகைக்கு விடப்பட்ட நாட்களின் எண்ணிக்கை
ஒரு நாளுக்கு ரூ. 50000	30
அரை நாளுக்கு ரூ. 25000	20

(iii) அங்கத்தவர் ஒருவருக்கான மாத சந்தா ரூபா 1 000 ஆகும். 01.04.2012 இல் 100 அங்கத்தவர்கள் காணப்பட்டதுடன் அன்றைய தினம் 10 புதிய அங்கத்தவர்கள் இணைந்து கொண்டனர். இப்புதிய அங்கத்தவர்கள் முழு ஆண்டுக்குமான சந்தாவைச் செலுத்தினர். ஆரம்பத்தில் இருந்த 15 அங்கத்தவர்கள் 30.09.2012 இல் விலகினர். விலகிய சகல அங்கத்தவர்களும் அத்திகதி வரையான தமது சகல நிலுவைகளையும் செலுத்தியிருந்தனர். 31.03.2012 இல் நிலுவையாகக் காணப்பட்ட முழுச் சந்தாவும் நடைமுறை ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(iv) விளையாட்டுக் கழகத்தின் சிற்றுண்டிச்சாலையானது வெளிநிறுவனமொன்றினால் முகாமை செய்யப்படுவதுடன், அதன் வருமானத்தின் 20% விளையாட்டுக் கழகத்துக்கு செலுத்தப்படல் வேண்டும். இவ்வாண்டிற்கான சிற்றுண்டிச்சாலை வருமானம் ரூபா 300 000 ஆக இருந்ததுடன் அதிலிருந்து விளையாட்டுக்கழகத்துக்கு வரவேண்டிய தொகை பெறப்பட்டது.

(v) வருடாந்தம் 10% வட்டி வீதத்தில் ஒரு வருடத்தைக் கொண்ட நிலையான வைப்புக் கணக்கானது 01.12.2012 இல் ஆரம்பிக்கப்பட்டது.

(vi) இவ்வாண்டில் ஆதனம், பொறி, உபகரணங்கள் தொடர்பில் எதுவித கொள்வனவுகளும் அகற்றல்களும் நடைபெறவில்லை.

வேண்டப்படுவது:

(1) 31.03.2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவு கணக்கு

(2) 31.03.2013 இல் உள்ளபடியான திரண்டநிதி மற்றும் காசு மீதி

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

5. (அ) வரையறுத்த சொலமன் பொதுக்கம்பனியின் 2013 மார்ச், பெப்ரவரி மாதங்களுக்கான சம்பளப் பட்டியலில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

	மார்ச் 2013 (ரூ. '000)	பெப்ரவரி 2013 (ரூ. '000)
அடிப்படைச் சம்பளம்	8000	7000
மேலதிக நேரக் கொடுப்பனவு	500	400
ஊழியர் சேமலாப நிதியப் (EPF) பங்களிப்பு:		
ஊழியர்கள் (10%)	800	700
தொழில் வழங்குனர் (15%)	1200	1050
ஊழியர் நம்பிக்கை நிதியப் (ETF) பங்களிப்பு (3%)	240	210
கழிப்பனவுகள்:		
தொழிற்சங்க அங்கத்துவக் கட்டணம்	250	150
ஊழியர் கடன் அறவீடு	450	200

[பக். 6 ஐப் பார்க்க

மேலதிக தகவல்கள் :

(i) ஒவ்வொரு மாதச் சம்பளமும் தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆம் நாள் வழங்கப்படுகின்றது.

(ii) ஒவ்வொரு மாதத்துக்குமான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியருக்கான நம்பிக்கை நிதி பங்களிப்புக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் நாள் அனுப்பப்படுகின்றது.

வேண்டப்படுவது:

(1) கம்பனியின் மார்ச் 2013 மாதத்திற்கான ஊழியர் தொடர்பான செலவுகள் (ஒவ்வொரு உருப்படிகளையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.)

(2) 2013 மார்ச் மாதத்திற்கான கம்பனியின் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு, சம்பளச் சென்மதி கணக்கு, ஊழியர் சேமலாப நிதி சென்மதி கணக்கு (ஆரம்ப மீதிகள் உள்ளடங்கலாக).

(05 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த மதுரா பொதுக்கம்பனியினதும், வரையத்த சுமிதா பொதுக்கம்பனியினதும் 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்களின் சுருக்கங்கள் கீழே தரப்படுகின்றது.

	வரையறுத்த மதுரா கம்பனி (ரூ. '000)	வரையறுத்த சுமிதா கம்பனி (ரூ. '000)
விற்பனைகள்	6000	7 500
விற்பனைக் கிரயம்	(4000)	(5800)
மொத்த இலாபம்	2000	1700
செலவுகள்	(1100)	(800)
வரிக்கு முந்திய இலாபம்	900	900
வருமான வரி	(300)	(300)
ஆண்டிற்கான இலாபம்	**600**	**600**

31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்களும் கிடைக்கப்பெற்றன.

	மதுரா கம்பனி (ரூ. '000)	சுமிதா கம்பனி (ரூ. '000)
சராசரி சரக்கிருப்பு	1600	2900
சராசரி வியாபாரக் கடன்பட்டோர்	2400	2500
31.03.2013 இல் உரிமையாண்மை	3000	2400
31.03.2013 இல் நீண்டகாலக் கடன்கள்	3600	1800
செலவுகளில் உள்ளடங்கியுள்ள கடன் வட்டி	300	200

வேண்டப்படுவது:

(1) இரண்டு கம்பனிகளுக்குமான பின்வரும் விகிதங்கள்:

(i) உரிமையாண்மை மீதான திரும்பல்

(ii) வட்டிக் காப்பு

(iii) சரக்கிருப்புப் புரள்வு

(iv) கடன்பட்டோர் புரள்வு (சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் இடம்பெறுவதாகக் கொள்க)

(v) கடன்-உரிமையாண்மை

(2) மேலே (1) இலுள்ள கணிப்பீடுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் காரணங்களுடன் குறிப்பிடுக.

(i) உரிமையாளர்களுக்கு உயர்வான திரும்பலை வழங்கும் கம்பனி

(ii) ஆகக் கூடுதலான கடன் மூலதனத்தை பயன்படுத்தும் கம்பனி

(iii) கடன்பட்டோரிடமிருந்து பணத்தைச் சேகரிப்பதற்காக நீண்ட காலத்தை எடுக்கும் கம்பனி

(iv) குறுகிய காலப்பகுதியில் சரக்கிருப்புக்களை விற்பனை செய்யும் கம்பனி

(v) கடனிற்கான வட்டியை செலுத்துவதற்கு உயர்வான இயலுமையைக் கொண்டுள்ள கம்பனி

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

6. (அ) நாதன் PLC நிறுவனத்தின் 31.03.2012 இலுள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

சொத்து	கிரயம் (ரூ. '000)	கொண்டுசெல் தொகை (ரூ. '000)	எஞ்சியபெறுமதி (ரூ. '000)	எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் (வருடங்கள்)
காணி	3500	3000	-	-
கட்டடம்	2500	1000	-	25
மோட்டார் வாகனம்	5000	3200	500	5
அலுவலக உபகரணம்	500	400	100	4

இத்திகதியில், கம்பனியானது மோட்டார் வாகனமொன்றை மட்டுமே சொந்தமாக வைத்திருந்தது. சொத்துக்களிற்கு கிரயத்தின் மீது நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகிறது.

31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காணி மீள் மதிப்பு நட்டம் ரூபா 500 000 ஆகும்.

[பக். 7 ஐப் பார்க்க

இச்சொத்துக்கள் தொடர்பில் 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு:

திகதி	கொடுக்கல்வாங்கல்
01.04.2012	ரூபா 1250000 செலவில் கட்டட விஸ்தரிப்பு செய்யப்பட்டது. இதன் விளைவாக கட்டடத்தின் எஞ்சியுள்ள பயன்தரு ஆயுட்காலம் 10 ஆண்டுகளில் இருந்து 15 ஆண்டுகளாக அதிகரித்தது.
01.10.2012	ரூபா 3000000 இற்கு மோட்டார் வாகனம் விற்கப்பட்டதுடன் ரூபா 4000000 இற்கு புதிய மோட்டார் வாகனமொன்று வாங்கப்பட்டது. புதிய மோட்டார் வாகனத்தின் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலம் 6 ஆண்டுகளாக ஆகும். அதன் எஞ்சிய பெறுமதி ரூபா 400000 ஆகும்.
01.01.2013	ரூபா 50000 செலவில் அலுவலக உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டது.
31.03.2013	ரூபா 4000000 ஆக காணி மீள்மதிப்பிடப்பட்டது.

மேலேயுள்ள கொடுக்கல்வாங்கல்களைச் சீராக்குவதற்கு முன்னர் 31.03.2013 இல் உள்ளபடியான நிறுவனத்தின் உரிமையாண்மை ரூபா 1000000 ஆகும்.

வேண்டப்படுவது:

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உருப்படி ஒவ்வொன்றிற்கும் 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுகளைக் கணிப்பிடுக.

(2) மேலேயுள்ள கொடுக்கல்வாங்கல்களைச் சீராக்கியதன் பின்னர் நிறுவனத்தின் 31.03.2013 இல் உள்ளபடியான் உரிமையாண்மையைக் கணிக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) குமுதா PLC நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

குமுதா PLC நிறுவனத்தின்

31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

	ரூபா '000	ரூபா '000
விற்பனைகள்		7200
விற்பனைக் கிரயங்கள்		(4200)
மொத்த இலாபம்		3000
காணி விற்பனையிலிருந்தான இலாபம்		300
பெறுமானத்தேய்வு - கட்டடம்	500	
- அலுவலக உபகரணம்	800	
ஏனைய செலவுகள்	1000	(2300)
வரிக்கு முந்திய இலாபம்		1000
வருமானவரி		(300)
ஆண்டிற்கான இலாபம்		**700**

குமுதா PLC நிறுவனத்தின்

31 மார்ச்சில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று (ஐந்தொகை)

	2013 (ரூ. '000)	2012 (ரூ. '000)
காணி	5000	9000
கட்டடம் - கிரயத்தில்	10000	10000
திரண்ட பெறுமானத்தேய்வு - கட்டடம்	(5000)	(4500)
அலுவலக உபகரணம் - கிரயத்தில்	8000	4000
திரண்ட பெறுமானத்தேய்வு - அலுவலக உபகரணம்	(2400)	(1600)
சரக்கிருப்பு	1400	1000
வியாபாரக் கடன்பட்டோர்	1500	1200
வங்கியிலுள்ள காசு	1500	500
	20000	**19600**
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	14000	13000
நிறுத்தி வைத்த வருவாய்கள்	4200	4000
வியாபாரக் கடன்கொடுத்தோர்	1500	2000
செலுத்த வேண்டிய வருமானவரி	300	600
	20000	**19600**

மேலதிக தகவல்கள் :

(i) சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) 01.04.2012 இல் கம்பனியானது 10000 பங்குகளை ரூபா 1000000 இற்கு வழங்கியுள்ளது.

(iii) காணியின் ஒரு பகுதியானது ரூபா 4300000 காசுக்கு விற்கப்பட்டது.

(iv) 31.03.2013 இல் ரூபா 4000000 இற்கு அலுவலக உபகரணங்கள் காசுக்கு வாங்கப்பட்டது.

(v) இவ்வாண்டில் இடைக்காலப் பங்கிலாபமாக ரூபா 500000 செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது :

பொருத்தமான இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கு அமைய 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான குமுதா PLC நிறுவனத்தின் காசுப் பாய்ச்சற் கூற்று ***(10 புள்ளிகள்)***

(மொத்தம் 15 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

7. (அ) உற்பத்திக் கம்பனி ஒன்றின் கடன்பட்டோர் பேரேட்டில் இருந்து 2013 ஜூன் மாதத்திற்காக பிரித்தெடுத்த தகவல்கள் பின்வருமாறு (சகல தொகைகளும் ரூ. '000)

கடன்பட்டோர்	01.06.2013 இல் மீதி	விற்பனைகள்	பெற்ற காசு	கொடுத்த கழிவு	அறவிட முடியாக் கடன்கள்	30.06.2013 இல் மீதி
அஜித்	300	1400	1000	140	-	560
தயான்	200	300	200	30	-	270
மல்லிகா	-	100	-	-	40	60
கமலா	100	100	-	-	20	180
மொத்தம்	**600**	**1900**	**1200**	**170**	**60**	**1070**

30.06.2013 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தமும் இணங்கவில்லை. அதனைத் தொடர்ந்து பரிசீலித்தபோது பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) மாதத்திற்கான விற்பனைகளானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1 090 000 ஆக பதியப்பட்டுள்ளது. எனினும் இது விற்பனைக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ரூபா 600 000 கடனிற்கு விற்பனை செய்யப்பட்ட இயந்திரமொன்றின் விற்பனைத் தொகையானது விற்பனையாகக் கருதப்பட்டு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(iii) இம்மாதத்தில் பதிவழிக்கப்பட்ட அறவிட முடியாக் கடன்களானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை. பதிலாக, இவைகள் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(iv) கடன்பட்டோருக்குக் கொடுத்த கழிவுகளானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனினும், இது கொடுத்த கழிவுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

(1) 30.06.2013 இல் உள்ளபடியான கடன்பட்டோர் பேரேட்டு மீதியையும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியையும் இணக்கம் செய்வதற்கான கூற்று

(2) மேலேயுள்ள (i) மற்றும் (iv) ஆகியவற்றின் தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பல்கள் வேண்டப்படுகின்றன).

(05 புள்ளிகள்)

(ஆ) கம்பனி ஒன்று தனது உற்பத்திச் செயன்முறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காகப் புதிய இயந்திரமொன்றை வாங்குவதற்கு எண்ணுகின்றது. இது தொடர்பாகப் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

(i) இயந்திரம் தொடர்பான தகவல்கள் :

கிரயம்	ரூபா 1000000
பயனுள்ள ஆயுட்காலம்	5 ஆண்டுகள்
எஞ்சிய பெறுமதி	ரூபா 100000
வருடாந்த பராமரிப்பு கிரயம்	ரூபா 50000

(ii) இப்புதிய இயந்திரத்தைச் பயன்படுத்துவதன் மூலம் வருடாந்தம் ரூபா 250000 நேர் ஊழியக் கிரயங்களை சேமிக்க முடியும்.

(iii) இப்புதிய இயந்திரம் வாங்கப்படுமானால் பழைய இயந்திரத்தை ரூபா 150 000 இற்கு விற்க முடியும்.

(iv) 10% திரும்பல் வீதத்தில் கழிவீட்டு காரணிகள் :

ஆண்டு	1	2	3	4	5
கழிவீட்டுக் காரணி	0.91	0.83	0.75	0.68	0.62

வேண்டப்படுவது:

மேலே கூறப்பட்ட செயற்றிட்டம் தொடர்பில்:

(1) ஒவ்வொரு வருடத்துக்குமான காசு உட்பாய்ச்சல்களும் காசு வெளிப்பாய்ச்சல்களும்

(2) திரும்பப் பெறும் காலம்

(3) கணக்கீட்டு திரும்பல் வீதம் (ஆரம்ப முதலீட்டின் அடிப்படையில்)

(4) தேறிய நிகழ்காலப் பெறுமதி

(5) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் இயந்திரத்தை கொள்வனவு செய்ய வேண்டுமா என்பதற்கான சிபாரிசு

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

* * *